[2024 பிப்ரவரி 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

25—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***50780—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை நகராட்சிப் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டத்தில், விளாங்குறிச்சியில் ELCOT நிறுவனம் 61.59 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.107 கோடி முதலீட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை (SEZ) உருவாக்கியுள்ளது. இது காரமடை நகராட்சியிலிருந்து 24 கி.மீ. தொலைவில் உள்ளது.

ELCOT நிறுவனம் இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி 3,524 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாகக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது. இந்த ELCOSEZ–ல் பின்வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

1) திருவாளர் விப்ரோ லிமிடெட்–9.5 ஏக்கர்.

2) திருவாளர் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட்–9.5 ஏக்கர்.

மேற்கூறிய தொழில்நுட்ப நிறுவனங்கள் 23 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, சுமார் 16,809 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

2024 பிப்ரவரி 15]

மேலும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களின் இடத் தேவையைப் பூர்த்தி செய்ய, 2.66 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.114.16 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, காரமடையில் கூடுதல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டிய தேவை ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். நீண்ட போராட்டத்திற்குப் பிறகு எதிர்க்கட்சித் துணைத் தலைவராகப் (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு உதயகுமார் அவர்களைப் பாராட்டி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எங்கேயும் போராட்டம் எல்லாம், ஒரு இடத்திலேயும் நடக்கவில்லையே நாட்டில்.*

திரு. A.K. செல்வராஜ்: *சட்டப் போராட்டமே நடந்திருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்* recommend *செய்தார்கள். இடம் கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) முன்புபோல் கொடுக்காமல் இல்லை, கொடுத்திருக்கிறோம்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு நன்றி. கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி மற்றும் சுற்றுவட்டாரங்களில் படித்த இளைஞர்கள் அதிகமாக உள்ளனர். அவர்கள் தற்சமயம் சென்னை, பெங்களூரு போன்ற* Tier–I *மற்றும் கோவை போன்ற* Tier–II *நகரங்களில் பணியாற்றி வருகிறார்கள். தி.மு.க. தேர்தல் அறிக்கையில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, தம்பி.*

[2024 பிப்ரவரி 15

திரு. A.K. செல்வராஜ்: ஒரு நிமிடம். ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கேள்வி நேரம். உங்களுடைய கேள்வியை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) உங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: அதைத்தான் சொல்கிறேன், சொல்லவிடுங்கள். நான் தவறாகச் சொன்னால், நீங்கள் தப்பு என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, தவறு (குறுக்கீடு) இல்லை. நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்பாகச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அது முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள், மறுபரிசீலனை செய்யச் சொல்லுங்கள். அவ்வளவுதான் கேள்வி.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் நான் காரணம் சொல்கிறேன். தயவுசெய்து, நான் ஒவ்வொரு காலகட்டத்திலே பேசும்போதும் இப்படியே குறுக்கீடு செய்கிறீர்கள். அப்படியென்றால், நான் கேள்வி கேட்காமலே உட்கார்ந்துகொள்கிறேன். நீங்களே என்னுடைய கேள்வியைக் கேட்டு, அதற்கான பதிலை வாங்கிக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் (குறுக்கீடு) இங்கே பாருங்கள், நீங்கள் சொன்னதற்காகச் சொல்கிறேன். நீங்கள், உங்களுடைய தலைவரைப் புகழ வேண்டுமென்றால், demand-ல் பேசும்போது புகழலாம். ஆனால், கேள்வி நேரத்தில் பேசி, அந்த நேரத்தையும் வீணாக்குகிறீர்கள். அதற்குப் பிறகு பேசும்போது, தேர்தல் அறிக்கை பற்றி பேசுகிறீர்கள். கேள்வி கேட்டால், அந்தக் கேள்வி, அது சம்பந்தமான பதில், அதற்கு மறுபரிசீலனை, அதுதானே முறை. (மேசையைத் தட்டும் ஒலி) கேளுங்கள். இப்போது கேளுங்கள் என்றுதானே சொல்லிக்கொண்டிருக்கிறேன். கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: நான் கேட்கின்ற கேள்வி அது சம்பந்தம் இருக்கிறதா, இல்லையா என்பதைக் கேட்டுவிட்டு நீங்கள் பதில் சொல்லுங்கள், நான் பேசுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கை வரிசை எண் 193-ல்

2024 பிப்ரவரி 15]

தொழில் கொத்துக்களைப் பரவலாக்குவதன் மூலமாக, அதாவது தொழில் கொத்துக்களை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் (குறுக்கீடு) இல்லை, demand-ல் நீங்கள் பேசும்போது எது வேண்டுமானாலும் பேசுங்கள். கேள்வி நேரம்; மக்களுக்குப் பயன்படக்கூடிய நேரம் இது. நீங்கள் அதை மட்டும் பேசினீர்கள் என்றால், நன்றாக இருக்கும்.

திரு. A.K. செல்வராஜ்: நான் அது சம்பந்தமாகத்தான் கேட்கிறேன். நான் கேட்க வேண்டியதைக் கேட்கிறேன். நான் அது தொடர்பாகத்தான் கேட்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்லியிருக்கிறார்கள். அது தொடர்பாக நீங்கள் அடுத்த துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: தொழில் கொத்துக்களைப் பரவலாக்குவதன்மூலம் வேளாண்மை அல்லாத தொழில் வாய்ப்புகளை உருவாக்குவோம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகையினால், நான் சொல்வது என்னவென்றால், படித்த இளைஞர்கள் அதிகமான அளவிலே மேட்டுப்பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலே இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் TIDEL மற்றும் ELCOT மூலமாக, பின்தங்கிய பகுதிகளுக்கு, தேர்தல் அறிக்கையிலே சொல்லியதுபோல தொழில் வாய்ப்புகளை அமைத்துத்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கிற கோரிக்கை மிகவும் சரியான, நியாயமான கோரிக்கை. ஏனெனில், தேர்தல் அறிக்கையைத் தாண்டி இங்கே அவையில் நாங்கள் கூறியிருக்கிறோம். எனக்கு முன்னால் இருந்த

அமைச்சர் அவர்கள் அவருடைய அறிவிப்பில் எங்கெங்கு Tier–II cities இருக்கின்றனவோ அங்கெல்லாம் முடிந்தளவுக்கு ஒரு I.T. park–ஐ உருவாக்கலாம் என்று கூறியிருக்கிறார். ஏனெனில், இப்போது இவர் கூறுகிற கருத்துக்கு நான் ஒருசில புள்ளிவிவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகிற number one துறை எதுவென்றால் அது I.T. தான். ஏனெனில், manufacturing sector–ல் நாம் எவ்வளவு முதலீடு கொண்டுவந்தாலும் அதற்கு நிலம் ஒதுக்குவது, கட்டுமானப் பணி என எல்லாவற்றையும் சேர்த்தால் இரண்டு முதல் நான்கு வருடங்கள் ஆகிவிடும். ஆனால், I.T.–ல் கட்டடமும், internet connection–ம் இருந்தால் உடனே வேலைவாய்ப்பை உருவாக்கலாம். அதற்காகவேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் எந்த வகையில் ஊக்கம் கொடுக்க முடியுமோ அதையெல்லாம் சிறப்பாகக் கொடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதன் விளைவுகளை நான் இன்றைக்குச் சொல்கிறேன்.

சராசரியாக ஓர் ஆண்டுக்கு 4 முதல் 5 மில்லியன் சதுர அடி office கட்டப்படக்கூடிய அல்லது lease எடுக்கப்படக்கூடிய சென்னை மாநகரப் பகுதியில் சென்ற ஆண்டு record ஆக 11 மில்லியன் சதுர அடி புதிதாக I.T. offices திறக்கப்பட்டிருக்கின்றன. இது நாம் மட்டும் தனியாக இல்லை; தனியாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதே வழியில் ELCOT நிறுவனம் முந்தைய ஆட்சியில் 3 கட்டடங்கள்; ஒன்று திருச்சியிலும், ஒன்று சென்னையிலும், ஒன்று கோயம்புத்தூரிலும் துவங்கினார்கள். என்ன செய்தார்கள் என்றால் சென்னைக்கும், கோயம்புத்தூருக்கும் Environmental Clearance–ஐ (EC) வாங்காமல் கட்டுமானப் பணியை ஆரம்பித்துவிட்டார்கள். இப்போது அந்தக் கட்டுமானப் பணியை முடித்திருந்தாலும் யாரோ போய் வழக்கு போட்டு EC இல்லை என்று திறப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதைத் திறந்து வைப்பதற்கு நீதிமன்றத்தில் போராடிக் கொண்டேயிருக்கிறோம். கோயம்புத்தூரிலே மிகப் பெரிய demand இருக்கிறது. அபரிமிதமான வளர்ச்சி இருக்கிறது. கோவையில் இன்றைக்கு office space–க்கு அவ்வளவு பெரிய demand இருக்கிறது. இரண்டரை இலட்சம் சதுர அடிக்குக் கட்டடத்தை வைத்துக்கொண்டு, EC வாங்காமல் கட்டியதால், திறக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், இந்தத் துறையில் ஏற்கெனவே,

2024 பிப்ரவரி 15]

இந்த I.T. park-ஐ உருவாக்குகிற தனி நபர்கள், பெரிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருக்கிற திறமையைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவே அவர்களாகவே முன்வந்து கட்டடமும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ELCOT-லும் முடிந்த அளவு நாம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த Environmental Clearance என்பது கிடைத்து, கோயம்புத்தூரில் இந்த சுமார் இரண்டரை இலட்சம் சதுர அடி கட்டடம் திறக்கப்பட்டால் இப்போதைக்கு அவர் கேட்கிற வேலைவாய்ப்புகள் பக்கத்திலேயே உருவாகும். இன்னும் நாங்கள் சொன்னபடி, நிதிநிலைக்கேற்ப எல்லா Tier-II cities-யிலும் ELCOT I.T. park-ஓ or I.T. tower-ஓ உருவாக்குவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் தொழில் வளர்ச்சியிலே முன்னணியில் இருக்கிற மாவட்டம். சென்னை மாநகரம் பருவ மழையால் ஆண்டுதோறும் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி வருகிறது. இதனால் சென்னையிலுள்ள பன்னாட்டு IT நிறுவனங்கள் தங்கள் project-களைத் தற்காலிகமாக மழைக் காலங்களிலே கோவை நகரத்திற்கு மாற்றி வருகிறார்கள். கோவை விமான நிலைய விரிவாக்கம் காலதாமதம் ஆகிவருவதால், பல வெளிநாட்டு விமானங்கள் வருவதற்கு வசதியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதனால், அந்த பன்னாட்டு IT company-கள் நிரந்தரமாக கோவைக்கு வருவதிலே காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, விமான நிலைய விரிவாக்கத்தை உடனடியாகச் செய்ய வேண்டும். அதற்கடுத்தாற்போல, அந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் நிரந்தரமாக கோவைக்கு வரவேண்டும். ஆண்டுதோறும் சென்னையிலே பருவமழை அதிகமாகப் பெய்வதால் அங்கே பாதிப்புக்குள்ளாகிற நிறுவனங்கள் கோவைக்கு வர விரும்புகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அரசு, IT நிறுவனங்கள் கோவைக்கு வருவதற்கு ஏதுவாக ELCOT மூலமாக புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே நீங்கள் Special Economic Zone அறிவித்திருக்கிறீர்கள். Special Economic Zone-ல் அந்தக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தந்தால் கோவை இன்னும் மிகப் பெரிய அளவிலே வளர்ச்சியடைவதற்கு

வாய்ப்பு இருக்கும். அரசு அதைச் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத் துறை மட்டுமல்லாமல், விமான நிலையம் விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பான கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார். அவற்றிற்கெல்லாம் நான் பதில் சொல்வதைக் காட்டிலும், சம்பந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். எனவே, தகவல் தொழில்நுட்பத் துறை தொடர்பாக மட்டும் நான் பதிலளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட risk management-ஐப் பொறுத்தவரை, எங்கெல்லாம் வெள்ள பாதிப்பு உள்ளிட்ட பேரிடர் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளனவோ, அங்கெல்லாம் கூடுதல் வேலைவாய்ப்புகள் இருக்கக் கூடாது. அதேபோன்று, ஒரே ஊரில் 10 ஆயிரம் வேலைவாய்ப்புகள் என்பதற்குப் பதிலாக, அதைப் பிரித்து redundancy, dependency இல்லாமல் இருக்கும் வகையில் செயல்படுத்துவது நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. உலகம் முழுவதும் நடைபெற்று வருகிறது. எங்கு மனிதவளம் இருக்கிறதோ, அங்குதான் ஈர்ப்பும் இருக்கிறது. அதுதான் தமிழ்நாட்டினுடைய முக்கிய சக்தி. 100 ஆண்டுகளாக திராவிட இயக்கங்களால் எல்லாருக்கும் கல்வி கொடுக்கப்பட்டுள்ளது. ஓர் ஆண்டில் இந்திய அளவில், பொறியியல் கல்லூரிகளிலிருந்து வெளிவரும் Engineers-ல் 17% Engineers தமிழ்நாட்டிலிருந்து மட்டும் வெளிவருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அனைத்து நிறுவனங்களும் இங்கு வருகின்றன. எவ்வாறு சென்னையை de-risk செய்து, கோயம்புத்தூர் செல்வதற்கு முனைகிறார்கள் என்று சொல்கிறீர்களோ, அதேபோன்று, பெங்களூருவை de-risk செய்து, ஐதராபாத்தை de-risk செய்து, சென்னைக்கோ, கோயம்புத்தூருக்கோ, மதுரைக்கோ வர

2024 பிப்ரவரி 15]

நினைக்கிறார்கள். மதுரையில், இத்தகைய 3 புதிய நிறுவனங்களை நானே சென்று திறந்து வைத்திருக்கிறேன். அவை Genpact *உள்ளிட்ட உலகளவில் இருக்கக்கூடிய பெரிய நிறுவனங்கள். எனவே, இத்தகைய நிறுவனங்களை ஈர்ப்பதுதான் எங்களது இலக்கு.*

அதற்கேற்ப, இன்னும் 10 நாட்களில், அதாவது 23, 24 ஆம் தேதிகளில் ஒரு பெரிய I.T. conference*–ஐ நடத்தவிருக்கிறோம். அதற்கு,* America, Singapore, Australia, Europe *உள்ளிட்ட நாடுகளிலிருந்து நிறுவனங்களை வரவழைக்கவுள்ளோம். தொழில் துறை முதலீடுகளை ஈர்ப்பதற்காக எப்படி* Global Investors Meet (GIM) *நடத்தப்பட்டதோ, அதுபோன்று தகவல் தொழில்நுட்பத் துறை சார்பாக ஒரு* conference *நடத்தவுள்ளோம். அதுமட்டுமல்லாமல், நாங்களே அனைத்து நாடுகளுக்கும் சென்று, ஒரு* Marketing Programme *நடத்தவுள்ளோம். அதாவது, இங்கிருக்கும் திறனை, திறமையை, மனிதவளத்தை வேறு ஒரு நாட்டிற்குச் சென்று அங்கு உருவாக்குவதற்குப் பதிலாக நமது ஊரிலேயே முதலீடு செய்யுங்கள், அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாங்கள் செய்து கொடுக்கிறோம் என்கிற ஊக்கத் திட்டத்தை,* policy*–ஐ சிறப்பித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குக் கொடுத்திருக்கிற ஆதரவினால், இவற்றையெல்லாம் சிறப்பாகச் செய்து, கடந்த ஆண்டின்* record*–ஐ இந்த ஆண்டு* beat *செய்கிற அளவிற்குப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, சிறப்பான வேலைவாய்ப்புகள் உருவாகும். நீங்கள் குறிப்பிட்டது போன்று, கோயம்புத்தூரில் இன்னும் நிறைய நிறுவனங்களை ஈர்ப்பதற்கு முழு முயற்சி எடுத்து, அதையும் நிறைவேற்றுவோம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*